TA2C

Register No. [ ]

(For the candidates admitted from 2017-2018 onwards)

## LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021.

(Three-year Regular Course)

First Year - Second Semester

## CONSTITUTIONAL LAW - I

Time: 2½ hours

Maximum: 70 marks

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**
**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.**

1. "Right to freedom of speech and expression is not without restriction". Examine the statement with relevant cases.

   "பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் கட்டுப்பாடற்ற ஒன்றல்ல" - இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகள் கொண்டு ஆராய்க.

2. Explain the modes of acquiring Indian citizenship under the citizenship Act, 1955.

   1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகளை விளக்குக.

3. Examine to what extent the doctrine of Rule of Law has been applied in the Constitution of India.

   சட்டத்தின் ஆட்சி கோட்பாடு எந்த அளவிற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை ஆராய்க.

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**
**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.**

4. Explain the rights guaranteed to minorities under the Constitution and examine the Supreme Court's decision in T.M.A Pai vs State Karnataka.

   அரசமைப்பின் கீழ் சிறுபான்மையோருக்கு பொறுப்புறுதி அளிக்கும் உரிமைகளை விளக்கி டி.எம்.ஏ. பாய் எதிர் கர்நாடக மாநில அரசு என்ற வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்க.

5. Discuss the merits and demerits of Federal Constitution.

   கூட்டாட்சி அரசியலமைப்பின் நலன்களையும் நலனின்மைகளையும் விவாதிக்கவும்.

6. Discuss the Fundamental Duties.

   அடிப்படை கடமைகள் பற்றி விவாதிக்கவும்

### PART C – (5 x 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**
   **பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக**

   (a) Definition of State.
   அரசின் வரையறை

(b) Writ of Habeas Corpus under Article 32.
உறுப்பு 32ன் கீழ் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை.

(c) Judicial Review
நீதிமுறை மறு ஆய்வு

(d) Double jeopardy
இரட்டை இடர்பாடு

(e) Maneka Gandhi v.Union of India.
மேனகா காந்தி எதிர் இந்திய யூனியன்

(f) Right to Fair trial
நேர்மையான விசாரணைக்கான உரிமை

(g) Protection against self incrimination
குற்றச்சாட்டிற்கு தன்னையே உள்ளாக்குதலில் இருந்து பாதுகாப்பு.

## PART D – (2 x6 =12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. The request of 'A; who is under preventive detention to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative of his fundamental rights. Decide.

தடுப்புக் காவலில் வைக்கபட்டுள்ள 'A' என்பவர் தடுப்புக் காவல் ஆலோசனை குழுமம் முன்பு தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது முறையீட்டுரையினை சமர்ப்பிக்க கோருகிறார். அவரது கோரிக்கை மறுக்கப்பட்டது. அச்செயல்முறை தனது அடிப்படை உரிமைக்கு எதிரானதென வாதிடுகிறார். முடிவு.

9. 'A' concealed a large amount of income in order to escape from payment of tax under the Income Tax Act. As a settlement he agreed to pay rupees three lakhs by way of tax and penalty. In 1955, the Supreme Court held that taxation. under Income tax held as invalid. So 'A' claimed the recovery of the amount of rupees three lakhe. Will 'A' succeed?

இந்திய வருமானவரிச் சட்டத்தின் கீழ் வரிச் செலுத்தாமல் இருப்பதற்கு தன் அதிகப்படியான வருமானத்தை 'A' என்பவர் மறைக்க நினைக்கிறார். ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூபாய் மூன்று இலட்சம் வரியாகவும் மற்றும் அபராதமாகவும் செலுத்த அவர் ஒப்புக் கொள்கிறார். 1955 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அந்த வரிவிதிப்பு வருமானவரி சட்டத்தின் படி செல்லாது என்று தீர்ப்பளித்தது. 'A' ரூபாய் மூன்று லட்சத்ததை திரும்ப கோருகிறார். 'A' அந்தத் தொகையை திரும்பப் பெறுவதில் வெற்றி அடைவரா.

10. A foreign national woman was ganglaped by the employees of a railway company under inebriated condition. When a law student filed a public interest litigation for compensation for the victim against the railway company, it was pleaded that the railway company was not liable to pay compensation as the victim was not an Indian National. Decide.

ஒரு இருப்பூர்தி நிறும தொழிலாளர்கள் குடிபோதையில் ஒரு வெளிநாட்டு பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினர். பாதிக்கப்பட்ட பெண் சார்பாக இழப்பீடு கோரி ஒரு சட்ட மாணவர் இருப்பூர்தி நிறுமத்தின் மீது பொதுநல வழக்கிட்டார். இருப்பூர்த நிறுமம் வாதிரகையில் அந்தப் பெண் இந்திய நாட்டினர் அல்லர், எனவே இழப்பீடு ஏதும் வழங்கத் தேவையில்லை என வாதிட்டது. தீர்மானிக்க.

TA2D

Register No. | | | | | | |

4655-20

(For the candidates admitted from 2017-2018 onwards)

# LL.B.DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021.

(Three - year Regular Course)

First Year – Second Semester

## FAMILY LAW – II

Time: 2½ hours

Maximum: 70 marks

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.**

1. Explain the law of inheritance of Christians in India.

   இந்திய கிறிஸ்தவர்களின் உயிலிலா இறங்குரிமையின் விதிகளை விளக்குக.

2. Explain the methods for effecting partition under Partition Act.

   பாகப்பிரிவினை சட்டத்தின் கீழ் பாகப்பரிவினை ஏற்படுத்தும் முறைகளை விளக்குக.

3. Exlain and bring out the salient features of a Muslim will and is there any restriction on the power of the testator.

   முகமதிய உயிலின் இயல்புகளையும் எழுதிவைத்தவரின் அதிகாரத்திற்கு வரையறை உண்டா என்றும் விளக்குக.

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.**

4. The Mitakshara system of Coparceners is a much narrower body than a joint family - Discuss.

   மிதாக்ஷரா முறையின் பங்குரிமை கூட்டுக்ககுடும்பத்தை விட நேரானது என்பதை விவாதிக்கவும்.

5. Who is Mutawalli and explain the duties of Mutawalli.

   முத்தவல்லி என்பவர் யார் முத்தவல்லியின் பணிகளை விளக்குக.

6. What is succession certificate? Who can apply for it and when can it be granted?

   வாரிசுரிமை சான்றிதழ் என்றால் என்ன? யாரு விண்ணப்பம் செய்ய முடியும். எப்போது அது வழங்கப்படும?.

### PART C – (5 x 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

   (a) Probate
   உயில் மெய்ப்பித்தல்

(b) Will
உயில்

(c) Cognate
பெண்வழி உறவினர்.

(d) Can female be a Karta
பெண் கர்த்தாவாக இருக்கமுடியுமா.

(e) Essentials of Waqf
வக்பின் இன்றியமையாதவை.

(f) Ancestral Property
பரம்பரை சொத்து

(g) Codicil
உயிலிணைப்பு

**PART D – (2 x 6 = 12 marks)**

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**
**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:**

8 A, had three children, John, Mary and Henry. John dies leaving Four children. Mary dies leaving one. Henry alone survived the father. Distribute the property after death of A.

அ என்பவருக்கு மூன்று பிள்ளைகள் ஜான், மேரி மற்றும் ஹென்றி. ஜான் நான்கு குழந்தைகளையும், மேரி ஒரு குழந்தையையும் விட்டுவிட்டு இறக்கிறார்கள். ஹென்றி மட்டும் தந்தையுடன் ஜீவிக்கிறார். A-யின் இறப்பிற்கு பின் அவரது சொத்துக்களை பங்கிடவும்.

9 Ram died leaving behind his son Lavan and 2 grandsons Yuvan and Shravan, they are sons of his pre-deceased second son Kushan. Divide deceased Ram's property among the heirs.

ராம் என்பவர் தனது மகன் லவன் மற்றும் இரு பேரன்கள் யுவன், மற்றும் ஸ்ரவன்,ஆகியோரினை (அவரது முன்னதாக இறந்துவிட்ட இரண்டாவது மகன் குஷனின் மகன்கள் ஆவர்) விட்டு விட்டு இறக்கிறார். ராமின் இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளுக்கு சொத்தினை பகிர்ந்தளிக்கவும்.

10 P is an Islamic male P dies leaving behind his mother M, father F, widow W and 3 daughters D1, D2 and D3. Distribute the property.

P என்ற இஸ்லாமிய ஆண், தனது தந்தை F , தாய் M, விதவை W மற்றும் மூன்று மகள்களாகிய D1, D2 மற்றும் D3-யை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தை பங்கிடவும்.

---

**TA2A**

**Register No.** | | | | | | |

(For the candidates admitted from 2017-2018 onwards)

# LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021.

(Three-year Regular Course)

First Year – Second Semester

## LAW OF CONTRACTS - II

**Time: 2½ hours** **Maximum: 70 marks**

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Contract of Indemnity. What are the rights of an Indemnity holder? Distinguish between Indemnity and Guarantee.
ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையரை செய்க. ஈட்டுறுதி பெற்றிருப்பவரின் உரிமைகள் யாவை? ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதிக்குள்ள வேற்றுமைகளைக் கூறுக.

2. On what grounds may a Court dissolve the firm and discuss the relevant provisions of the Act?
கூட்டாண்மை நிறுமத்தை எக்காரணத்தின் அடிப்படையில் நீதிமன்றம் கலைக்கலாம் என்பதை தகுந்த சட்ட பிரிவுகளோடு விவாதிக்கவும்.

3. Define bailment and enumerate the rights and duties of a bailee.
ஒப்படைவு என்பதை வரையறு. ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றி விவரி.

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. How is an Agency terminated by the acts of parties and by the operation of law?
தரப்பினர்களின் செயல்களாலும், சட்டத்தின் செயலாலும் முகவரியம் எவ்வாறு முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

5. Define pledge and enumerate the rights of a Pawner and Pawnee.
அடகு என்பதை வரையறை செய்து அடகு வைப்பவர் மற்றும் அடகு பெறுபவர் ஆகியோருடைய உரிமைகளைக் குறிப்பிடுக.

6. Define trade practice and explain restrictive trade practice measure.
வணிக பழக்கம் என்பதை வரையறை செய்து வரையறைக்குட்பட்ட வணிக பழக்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றி விவரிக்க.

## PART C – (5 x 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**
**பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:**

(a) Lien and its nature.
பற்றுரிமை மற்றும் அவற்றின் தன்மை.

(b) Auction Sale.
ஏல விற்பனை.

(c) Goods and Documents of title of goods.
சரக்குகள் மற்றும் சரக்குகளின் உரிமை மூல பத்திரம்.

(d) Grace *v.* smith.
கிரேஸ் எதிர் ஸ்மித்.

(e) Caveat emptor.
வாங்குபவனே விழித்திரு.

(f) Consumer Protection Councils.
நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள்.

(g) Deficiency in service.
சேவையில் குறைப்பாடு.

## PART D – (2 x 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:**

8. 'A' lends a horse to 'B' which is unruly. This was not disclosed to 'B', though 'A' was aware of it. While racing, B was thrown away and injured. Whether A is answerable to B for the injury?
'அ' என்பவர் ஒரு முரட்டுக் குதிரையினை 'ஆ' என்பவருக்கு வாடகைக்கு கொடுத்தார். அது முரட்டுக் குதிரையென்று தெரிந்திருந்தும் அதனை 'ஆ' என்பவருக்கு தெரியப்படுத்தவில்லை. பந்தையத்தின் பொழுது 'ஆ' என்பவரை குதிரை தூக்கி எறிந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது. 'ஆ' – வின் காயத்திற்கு 'அ' பதில் சொல்ல கடமைப்பட்டவரா?

9. 'A' tells a shopkeeper, "deliver the rice to 'B'. I will see you paid" – Is it a contract of indemnity or guarantee – Give reason for your answer.
'அ' ஓர் கடைக்காரரிடம் "அரிசியை 'ஆ' – விடம் தந்துவிடவும், நான் உமக்கு அதற்குரிய பணத்தை கிடைக்குமாறு செய்கிறேன்" என்று கூறினார். இது ஒரு ஈட்டுறுதி அல்லது பொறுப்புறுதி ஒப்பந்தமா என்பதை தக்க காரணங்களுடன் விடையளிக்கவும்.

10. A, purchased two computers from B's shop. One was for his home and the other for his office. Both the computers were found to be defective. Has he got any remedy under the Consumer Protection Act?
'அ' இரண்டு கணிப்பொறிகளை 'ஆ' – வின் கடையிலிருந்து விலைக்கு வாங்கினார். ஒன்று அவரது வீட்டு உபயோகத்திற்கு எனவும் மற்றொன்று அவர் அலுவலகத்திற்கு என்றும் வாங்கப்பட்டது. இரண்டு கணிப்பொறிகளிலும் பழுது இருந்தது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு ஏதாவது தீர்வழி உண்டா?

———————

TA2B

Register No. | | | | | | | | |

(For the candidates admitted from 2017-2018 onwards)

## LL.B. DEGREE (SEMESTER) DEGREE EXAMINATIONS, JANUARY 2021.

(Three - year Regular Course)

First Year/Second Semester

## PROPERTY LAW

Time: : 2½ hours

Maximum: 70 marks

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Immovable property', as defined under the Transfer of Property Act. Is the definition exhaustive? Define how this definition leads to the inclusion of fixtures?

   'அசையாச் சொத்து' என்பதை சொத்துரிமை மாற்றச் சட்டத்தில் உள்ளவாறு வரையறு. இவ்வரையறை அனைத்தையும் உள்ளடக்கியதா? பதிப்பொருள்களையும் உள்ளடக்கும் வகையில் இவ்வரையறை எவ்வாறு செல்கிறது என்பதை விவரிக்கவும்.

2. Explain the doctrine of 'Lis pendens'. Bring out its essentials. Give illustrations and case laws.

   'வழக்கிடை உரிமை மாற்றம்' என்னும் கோட்பாட்டை விளக்குக. அதன் முக்கியக் கூறுகளை வெளிக்கொணர்க. எடுத்துக்காட்டுகள் மற்றும் வழக்குகளைக் கூறவும்

3. State the essentials of a 'Lease' under the Transfer of Property Act. What are its kinds and when a lease is terminated?

   சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் கீழ் காணப்படும் 'குத்தகை' என்பதின் அடிப்படைக் கூறுகளைக் கூறுக. ஆதன் வகைகள் யாவை? எப்பொழுது ஒரு குத்தகை முடிவுக்கு வரும்?

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. 'He who seeks equity must do equity' – Explain this maxim with reference to doctrine of Election.

   "தகைமை நெறியின் பலனை வேண்டுவோர் தகைமை நெறியையே கடைப்பிடிக்க வேண்டும்" – என்னும் தொடரை தேர்ந்து கொளல் கோட்பாட்டுடன் விவரிக்கவும்.

5. Explain the rights and liabilities of the seller and buyer before and after sale.

   விற்பனைக்கு முன்னும் பின்னும் விற்பவர் மற்றும் வாங்குவோரின் உரிமைகளையும் கடமைகளையும் விளக்குக.

6. What do you understand by 'clog on redemption'? Examine its validity and give illustration and leading cases?

   'அடைமான மீட்புக்கு தடை' என்பதன் மூலம் நீவிர் அறிவது என்ன? அதன் செல்லும் தன்மையை ஆராய்க. எடுத்துகாட்டுகள் மற்றும் முக்கிய வழக்குகளையும் கூறுக.

## PART C – (5 x 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Attestation
சான்றொப்பமிடல்

(b) Rule against accumulation
வருவாய்க் குவிப்புக்கு எதிரான விதி

(c) Tulk – *v* - Moxhay
டல்க் - எதிர் - மாக்ஸே

(d) Bellamy – *v* - Sabine
பெல்லமி – எதிர் - சபைன்

(e) Apparent and Non-Apparent Easements
வெளிப்படையான மற்றும் வெளிப்படையற்ற வசதியுரிமைகள்

(f) Dominant owner and servient owner
வசதியுரிமை அளிப்பவர் மற்றும் வசதியுரிமை பெறுபவர்

(g) Quasi - Easements
வசதியுரிமைப் போல்வு

## PART D – (2 x6 =12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decide cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A, makes a gift of his property to 'X', 'Y' and 'Z'. Here 'X' and 'Y' accept the Gift while 'Z' refuses. What happens to the gift.
'A' என்பவர் 'X', 'Y' மற்றும் 'Z' ஆகிய மூவருக்கும் தன்னுடைய சொத்து ஒன்றைக் கொடையாக அளிக்கிறார். 'X', மற்றும் 'Y' அதனை ஏற்கின்றனர்.'Z' அக்கொடையை நிராகரிக்கிறார். கொடையின் நிலை யாது?

9. R Mortgages a vacant land to S and afterwards constructs a house on the land. Can S have security over the house also?
'R' ஒரு வெற்றிடத்தினை 'S' என்பவருக்கு அடைமானம் செய்து கொடுக்கிறார். பின்னர் அதில் ஒரு வீட்டினை கட்டுகிறார். 'S' அவ்வீட்டின் மீதும் பிணை கோர முடியுமா?

10. C and D are brothers. They partition their property and in the deed of partition, they include a condition that each party should sell the property only to the other. Is the condition valid? Give reason.
C மற்றும் D இருவரும் சகோதரர்கள். தங்களது சொத்தை பாகப் பிரிவினை செய்கையில் ஒரு நிபந்தனையை பாகப்பிரிவினை ஆவணத்தில் சேர்க்கிறார்கள். அதாவது, இருவரும் தங்களது சொத்துக்களை தங்களுக்குள் தான் விற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை சேர்க்கப்படுகிறது. இந்த நிபந்தனை செல்லும் தன்மை கொண்டதா? காரணம் கூறுக.

---